Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.251 /2022

| | |
|---|---|
| | Prosecution PW 6 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | நாகராஜன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 09.01.2024

**எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் தனிபிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.05.2022 ம் தேதி கருர் நகர காவல் நிலையத்தில் நான் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது முருகேசன்

s/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண் 381/2022 ச/பி 279, 304(எ) வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3.** பின்னர் வழககினை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே காலை 10 மணியளவில் சம்பவ இடம் சென்று சம்பவ இடமான கரூர் - கோவை ரோடு சேகர் @ கோ கடை முன்பு சம்பவ இடத்தை சாட்சிகள் ஜெனார்த்தனன், விக்னேஷ் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ 4.**

2.பின்னர் அன்றைய தினமே விபத்தில் அடிப்பட்டு இறந்துபோன காளியம்மாள் பிரேதத்தை அரசு மருத்துமனை சவ கிடங்கு முன்பு பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன் .. **பிரேத விசாரணை அ.சா.ஆ 5.** இறப்பின் தன்மை அறியும் பொருட்டு முதல் நிலை காவலர் 698 திருமதி. விஷ்வ பிரியா மூலம் பிரேத பரிசோதனைக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து பிரேதத்தை அனுப்பி வைத்தேன். 1 முதல் 8 சாட்சிகளை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கினை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

**இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

s/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.